எஸ்.டி.சி. 427/2020 அ.சா.1 சாந்தகுமார் த/பெ.தனசேகரன் வயது 38 28.03.2024.

(எதிரி ஆஜர்.)

சாட்சி அழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

நான் தற்போது வேலையில் இல்லை. நான் என்ன வேலை செய்துவருகிறேன் என்பதை குறித்து புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும், எனது பிரமாண வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும், நான் 12ம் வகுப்பு படித்துள்ளேன். நான் முதலில் எந்த வழக்கறிஞரை வைத்து வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன் என்றால் திரு. ராஜி வக்கில். திரு. ராஜி வழக்கறிஞர் எனது உறவினர் என்றால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பில் உள்ள விவரம் என்ன என்று தெரியுமா என்றால் தெரியும், ரகு என்பவர் என்னிடம் பெற்ற கடனுக்காக வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பினேன். ரகுவை எப்போதிலிருந்து எனக்கு தெரியும் என்றால் எனக்கு உறவினர்தான்.

எதிரி எப்போது என்னிடம் கடன் கேட்டார் என்றால் 17.05.2020ம் தேதிக்கு ஒரு மாதம் முன்னிலிருந்தே என்னிடம் ரூ.40,000 கடனாக கேட்டார். நான் மேற்படி தொகையை 17.05.2020ம் தேதி எதிரிக்கு கொடுத்தேன். வீட்டில் சேமித்து வைத்திருந்த ரூ.40,000 ஐ தான் எதிரிக்கு கடனாக கொடுத்தேன். மேற்படி விவரத்தை நான் புகாரிலும், வழக்கறிஞர் அறிவிப்பிலும் சொல்லவில்லை என்றால் அது நினைவில்லை. வேலை செய்யாதபோது எவ்வாறு எனக்கு ரூ.40,000 சேமிப்பு இருந்தது என்றால் தற்போது 2 மாதமாகத் தான் வேலையில் இல்லை, அதற்கு முன்பு இந்தியா ஷீ கம்பெனியிலும், வியாபாரமும் செய்து வந்தேன். நான் வட்டி தொழில் செய்து வருகிறேனா என்றால் இல்லை.

(சாட்சி வங்கியின் பணபரிவர்த்தனை குறித்த ஆவணங்களை சமர்பிப்பதற்காக கற்றறிந்த எதிரி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சாந்தகுமார்

Taken down by me in open court and read over to the witness in the presence of the accused and admitted by the witness to the correct.

(Sd./-) R.S.Praganthaa,
Judicial Magistrate, Vaniyambadi.